செய்தி வெளியீடு எண்: 699 நாள்– 9.10.2009

# அரசு ரப்பர் கழகம், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம், வனத்தோட்டக் கழகம் ஆகியவற்றின் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத்தொகை! 11 ஆயிரத்து 815 பேருக்கு 8 கோடியே 24 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

அரசு ரப்பர் கழகத் தோட்டப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள், வனத்தோட்டக் கழகப் பணியாளர்கள் ஆகியோர்க்கு 2008–2009ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

அதாவது, அரசு ரப்பர் கழகத் தோட்டத் தொழிலாளர்கள் 1806 பேருக்கும், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத் தொழிலாளர்கள் 9036 பேருக்கும் 8.33 சதவீத போனஸுடன் 11.67 சதவீத கருணைத் தொகையையும் சேர்த்து மொத்தம் 20 சதவீத போனஸ் வழங்கிடவும்,

அரசு ரப்பர் கழகப் பணியாளர்கள் 160 பேருக்கும், தமிழ்நாடு தேயிலை தோட்டப் பணியாளர்கள் 358 பேருக்கும், வனத்தோட்டக் கழகப் பணியாளர்கள் 455 பேருக்கும் 8.33 சதவீத போனசுடன் 1.67 சதவீத கருணைத் தொகையையும் சேர்த்து மொத்தம் 10 சதவீத போனஸ் வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக, அரசு ரப்பர் கழகம், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம், வனத்தோட்டக் கழகம் ஆகிய மூன்று அமைப்புகளையும் சேர்ந்த 11 ஆயிரத்து 815 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8 கோடியே 24 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் 2008–2009ஆம் ஆண்டுக்குரிய போனஸாக வழங்கப்படுகிறது.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9